[2nd September 1959

SRIMATHI HEMALATHA DEVI: அரசாங்கம் சலுகை கொடுத்து வருகிறார்கள் என்பதை பிற்பட்ட இனத்தவர்கள் அறிந்திருந்தும் இரண்டு மூன்று வருஷங்களாகத்தான் அந்தச்சலுகையின் பலனை அடைந்து வருகிறார்கள் என்பதை அரசாங்கம் அறியுமா? மேலும் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இந்த சலுகையை அளிக்க அரசாங்கம் முன் வருமா என்பதை அறிவிக்க முடியுமா?

THE HON. SRI P. KAKKAN: பிற்பட்ட துறையில் இருக்கிறார்களா என்பதைப் பார்த்துத்தான் அரசாங்கம் இந்த முடிவைச் செய்திருக்கிறது. மற்றவைகள் எல்லாம் இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அதனால் அதைப்பற்றி ஒன்றும் இப்பொழுது சொல்வதற்கு இல்லை.

SRI V. K. KOTHANDARAMAN: ஜாதி, மத, இன பாகுபாடு இன்றி மற்றப்படி பொருளாதார அடிப்படையைக்கொண்டு கடைபிடிப்பதற்கான ஏற்பாடு வெகு விரைவில் செய்வதற்கு யோசனை செய்துகொண்டிருப்பதாக சென்ற ஆண்டு நமது கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னது இப்பொழுது எந்த நிலைமையில் இருக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா?

THE HON. SRI P. KAKKAN: இது ரொம்பவும் முக்கியமான விஷயம். திடீரென்று இதைப்பற்றி ஒரு முடிவுக்கு வருவது என்பது முடியாது. கல்வி, பொருளாதார, சமூக, தொழில் துறைகளில் அவர்களுடைய நிலைமையைப் பார்த்து முடிவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. இது வெகு முக்கியமாக இருக்கிறபடியால் வெகு சீக்கிரத்தில் முடிவுக்கு வருவதற்கு இல்லை.

SRI T. S. RAMASWAMY: May I know whether a decision has been taken on this subject? If so, may I know that decision?

THE HON. SRI P. KAKKAN: It is under consideration.

SRI K. SATTANATHA KARAYALAR: பொருளாதார அடிப்படையில் பின் தங்கிய சமுதாயத்தின் நிலைமையை பரிசீலனை செய்வதற்கு யாரையோ நியமிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் இதைப் பற்றி பரிசீலனை செய்து அவர்கள் தங்களுடைய ரிப்போர்ட்டை சமர்ப்பித்து விட்டார்களா? அந்த ரிப்போர்ட் என்ன?

THE HON. SRI P. KAKKAN: அது சம்பந்தப்பட்ட இலாகவின் காரியதரிசியை நியமிக்கப்பட்டிருக்கிறது. அவருடைய ரிப்போர்ட்டின் முடிவு இன்னும் தெரியவில்லை.

MR. SPEAKER: கனம் அமைச்சர் அவர்கள் இன்னும் கொஞ்ச நேரத்தில் வருகிறேன் என்று சொல்லியனுப்பியிருப்பதால் அவர் வந்தவுடன் 67-வது கேள்வி எடுத்துக்கொள்ளப்படும்.

Prime Minister's stay at Ootacamund

*68 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

பிரதம மந்திரி நேரு அவர்கள் ஜூன் மாதத்தில் உதகையில் இருந்தபோது அவருடைய பாதுகாப்புக்காக எவ்வளவு செலவாகியது?

THE HON. SRI C. SUBRAMANIAM: A sum of Rs. 30,703.75 has been incurred on security arrangements made for the Prime Minister during his stay at Ootacamund in May–June 1959.

2nd September 1959]

SRI V. K. KOTHANDARAMAN : எத்தனை தினங்கள் அவர் அங்கே தங்கினார் ? அதற்காக வேண்டி என் இவ்வளவு அதிகப்படியான செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி தெரிந்து கொள்ள முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒரு வாரம் தங்கினார். ஒரு நாள் தங்குவதற்கு கணக்குப் போட்டுப் பார்த்தால் நாலாயிரம் ரூபாய் ஆகிறது. கனம் அங்கத்தினர் கட்சியைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சி மந்திரி சபை கேரளாவில் நடத்தியவர்கள் கணக்குப் போட்டாலும் இது ரொம்பவும் குறைவான செலவுதான் என்று அவர்களே உணர்ந்து கொள்ளுவார்கள்.

Khadi Spinning in Jails

* 69 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் உள்ள சிறைகளில் கதர் நூல் எடுக்கும் வேலை நடைபெறுகிறதா ?

(ஆ) சராசரி ஒரு வருஷம் எவ்வளவு பருத்தி செலவாகிறது ?

(இ) இலாபமா ? நஷ்டமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) 4,000 pounds.

(*c*) a small profit is realised.

SRI V. K. KOTHANDARAMAN : உபயோகப்படுத்தப்படக்கூடிய பருத்தியின் கிரயத்தைவிட அங்கே நூற்கப்படும் நூல் குறைவான விலைக்கு விற்கப்படுவதாக சொல்லப்படுகிறது. ஆகவே இது உண்மையா ? அப்படி நஷ்டமடையக்கூடிய விதத்தில் அங்கே விற்கப்படுமானால் அதற்கு வேண்டி இது போன்ற தொழில் செய்து கொண்டிருக்க வேண்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் ஆங்கிலத்தில் சொன்னேன் " ஸ்மால் ப்ராபிட் இஸ் ரியலைஸ்ட் " என்று. அதற்கு " கொஞ்சம் லாபம் வருகிறது " என்று தமிழில் அர்த்தம். கணக்குப் போட்டுப் பார்த்ததில் கொஞ்சம் லாபம் கிடைக்கிறது என்று சொன்னேன். கணக்குப் பார்த்ததில் 2,500 ரூபாய் வரையில் லாபம் வந்திருப்பதாகத் தெரிய வருகிறது. அது மட்டுமல்ல பெரும்பாலும் அங்கே சிறைதோட்டத்திலேயே உற்பத்தியாகக்கூடிய பருத்தியைத்தான் உபயோகப்படுத்தப்படுகிறது. ஒருக்கால் அதனால் நஷ்டம் வந்தாலும் பாதகம் இல்லை என்று சொல்லலாம். அந்தத் தொழில் வளர வேண்டும் என்பதும் சிறையில் இருக்கக்கூடியவர்களுக்கு நல்ல பயிற்சி இதன் மூலம் ஏற்பட வேண்டும் என்பதும்தான் இதனுடைய கருத்து.

SRI V. K. KOTHANDARAMAN : ஏற்கெனவே கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய நூலில் உற்பத்தி செய்யப்படுவது கூட விற்பனையாகாமல் இருக்கும்போது இந்தத் தொழில் அபிவிருத்தி ஆக வேண்டும் என்று சர்க்கார் ரொம்பவும் பிரதானமான கருத்துள்ள நிலைமையில் இருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒன்று கைத்தறிகாரர்களுக்கு நூல் வேண்டும். இரண்டாவது கைத்தறியில் நூற்கப்படும் நூல் கைத்தறி நூலாக இருக்கவேண்டும் என்பதை தெரியப்படுத்துகிறேன்.